# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## July 21, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. பிரிட்டனின் புதிய பிரதமராக ஆளும் தொழிலாளர் கட்சியின் தலைவர் ஆண்டி பர்ன்ஹாம் (56) முறைப்படி பொறுப்பேற்றுக்கொண்டார். தொடர்ந்து, தலைநகர் லண்டனில் உள்ள பிரதமரின் அதிகாரபூர்வ '10, டவுனிங் ஸ்டீரிட்' இல்லத்தில் ஆண்டி பர்ன்ஹாம் முதல்முறையாக உரையாற்றினார்.

2. யேமனில் செயல்பட்டு வரும் ஈரான் ஆதரவு ஹூதி கிளர்ச்சியாளர்கள், சவூதி அரேபியாவுக்கு எதிராக கடல்வழி முற்றுகையை அறிவித்தனர்.
   i. இதன்மூலம், உலகளாவிய கன்டெய்னர் போக்குவரத்தின் 25 சதவீதம் கடந்து செல்லும் சூயஸ் கால்வாயின் முக்கிய நுழைவாயிலான 32 கி.மீ. அகலமுள்ள பாப் அல் மண்டேப் நீரிணை, சவூதி கப்பல்களுக்கு மூடப்படும்.
   ii. யேமன் மீதான சவூதி அரேபியாவின் முற்றுகை மற்றும் யேமனின் சனா சர்வதேச விமான நிலையம் மீது அண்மையில் நடத்தப்பட்ட தாக்குதலுக்குப் பதிலடியாக இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

3. பாலஸ்தீன ஆயுதக் குழுவான ஹமாஸின் புதிய தலைவராக கலீல் அல்-ஹய்யா நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த 2024 அக்டோபரில், இஸ்ரேல் படைகளுடனான போரில் கொல்லப்பட்ட யஹ்யா சின்வாருக்குப் பதிலாக, இவர் இப்பொறுப்புக்குத்தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளார்.

4. பிஃபா உலகக் கோப்பை கால்பந்து 2026 சாம்பியனாக ஸ்பெயின் மகுடம் சூடியது. நட்சத்திர வீரர் ஃபெர்ரன் டோரஸ் 106-ஆவது நிமிஷத்தில் அடித்த லேட் கோலால் நடப்பு சாம்பியன் ஆர்ஜென்டீனா தோல்வியை தழுவியது.
   i. 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் உலகின் மிகப்பெரிய விளையாட்டுத் திருவிழாவான பிஃபா உலகக் கோப்பை கால்பந்து போட்டி கடந்த ஒரு மாதமாக அமெரிக்கா, கனடா, மெக்ஸிகோவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வந்தது. 32 அணிகளில் இருந்து 48 அணிகளாக விரிவாக்கப்பட்டு, மொத்தம் 104 ஆட்டங்கள் நடைபெற்றன.
   ii. நியுஜெர்ஸியின் மெட்லைஃப் மைதானத்தில் நடப்பு சாம்பியன்

ஆர்ஜென்டீனா- முன்னாள் சாம்பியன் ஸ்பெயின் இடையிலான இறுதி ஆட்டம் நடைபெற்றது.

iii. பிஃபா உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் இரண்டாவது முறையாக சாம்பியன் பட்டம் வென்ற ஸ்பெயின் அணிக்கு ரூ.430 கோடி பரிசுத் தொகை வழங்கப்பட்டது. ரன்னரான ஆர்ஜென்டீனாவுக்கு ரூ.328 கோடியும், மூன்றாம் இடம் பெற்ற இங்கிலாந்துக்கு ரூ.289 கோடியும், நான்காம் இடம் பெற்ற பிரான்ஸ் அணிக்கு ரூ.270 கோடியும் பரிசளிக்கப்பட்டது.

iv. அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், பிஃபா தலைவர் ஜியானி இன்பேன்டினோ, மெக்ஸிகோ அதிபர் கிளாடியா, கனடா பிரதமர் மார்க் கார்னி ஆகியோர் பரிசளித்தனர்.

v. வரும் 2030-இல் பிஃபா உலகக் கோப்பை ஸ்பெயினில் நடைபெறவுள்ளது. அப்போது கோப்பையை தக்கவைக்க ஸ்பெயின் முனையும். மொராக்கோ, ஸ்பெயின், போர்ச்சுகல் இணைந்து இப்போட்டியை நடத்தவுள்ளன.

5. *குளோபல்* செஸ் லீக் தொடர் நான்காம் சீசன் வரும் செப். 3 முதல் 14 வரை பெங்களூருவில் நடைபெறவுள்ள நிலையில், அதற்கான தொடக்க நிகழ்வு செஸ் மும்பையில் நடைபெற்றது. உலக தினத்தையொட்டி (July 20) நடைபெற்ற நிகழ்வில் ஜாம்பவான் விஸ்வநாதன் ஆனந்த் பங்கேற்று விழிப்புணர்வு ஏற்படுத்தினார். ஜிசிஎல் தொடரில் உலகின் நம்பர் 1 வீரர் மாக்னஸ் கார்ல்ஸன், மகளிர் உலகக் கோப்பை சாம்பியன் திவ்யா தேஷ்முக் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

6. *வர்த்தகம்,* முதலீடு மற்றும் விநியோகச் சங்கிலியை மேம்படுத்த இந்தியா-மால்டோவா ஒப்புக்கொண்டதாக குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு தெரிவித்தார்.

i. *மால்டோவா* நாட்டுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்ட முதல் இந்திய குடியரசுத் தலைவரான திரௌபதி முர்மு, அந்நாட்டு அதிபர் மாயா சாண்டுவை சந்தித்தார். அப்போது இரு நாடுகளிடையேயான இருதரப்பு உறவு குறித்து ஆலோசனை நடத்தினார்.

ii. இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'இந்தியா-மால்டோவா இடையேயான முக்கியத் தூணாக பொருளாதார ஒத்துழைப்பு திகழ்கிறது. வேளாண்மை, தளவாடங்கள், உள்கட்டமைப்பு, சுகாதாரம், மருத்துவம்,

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, பொது எண்ம உள்கட்டமைப்பு, செயற்கை நுண்ணறிவு மற்றும் புத்தாக்கம் உள்ளிட்ட துறைகளில் வர்த்தகம், முதலீடு, விநியோகச் சங்கிலியை வலுப்படுத்தி வணிகச் சூழலை எளிதாக மாற்றி இருநாட்டுத் தொடர்பை மேம்படுத்த இருவரும் ஒப்புக்கொண்டோம். இதன் ஒரு பகுதியாகவே இந்தியா-மால்டோவா வணிகக் கூட்டமைப்பு நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது. செயற்கை நுண்ணறிவு, வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் மால்டோவா நிபுணர்களுக்கான பயிற்சி இடங்களை இந்தியா இரட்டிப்பாக்கவுள்ளது.

iii. மூன்று நாடுகள் அரசு முறைப் பயணத்தில் முதல் கட்டமாக மால்டோவா சென்ற திரௌபதி முர்மு, ஜூலை 21,22 ஆகிய தேதிகளில் மாசிடோனியாவுக்கும் ஜூலை 23 முதல் 25 வரை ரோமேனியாவுக்கும் பயணிக் கவுள்ளார்.

7. *இந்தியாவில்* டெங்கு காய்ச்சலைத் தடுப்பதற்கான தடுப்பூசிக்கு முதல் முறையாக மத்திய மருந்துக் கட்டுப்பாட்டு தலைமை இயக்குநரகம் (டிசிஜிஐ) சந்தைப்படுத்தல் அனுமதி வழங்கியுள்ளது. ஜப்பானைச் சேர்ந்த டகேடா (Takeda) மருந்து நிறுவனத்தின் QDENGA (TAK-003) என்ற டெங்கு தடுப்பூசிக்கு இந்த அனுமதி வழங்கப்பட்டிருப்பது, நாட்டின் டெங்கு தடுப்பு நடவடிக்கைகளில் முக்கிய மைல்கல்லாகக் கருதப்படுகிறது.

i. *டெங்குகாய்ச்சல்* இந்தியாவில் ஆண்டுதோறும் பருவமழைக் காலங்களில் அதிகரித்து, ஆயிரக்கணக்கானோருக்கு பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. இதுவரை கொசு ஒழிப்பு, விழிப்புணர்வு மற்றும் நோய் அறிகுறிகளுக்கான சிகிச்சை ஆகியவை மட்டுமே முக்கிய தடுப்பு வழிமுறைகளாக இருந்து வந்த நிலையில், தற்போது தடுப்பூசிக்கும் ஒப்புதல் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்க முன்னேற்றமாக பார்க்கப்படுகிறது.

ii. QDENGA என்பது உயிருடன் பலவீனப்படுத்தப்பட்ட (Live-attenuated), நான்கு வகை (Tetr avalent) டெங்கு தடுப்பூசியாகும். டெங்கு வைரஸின் நான்கு முக்கிய செரோடைப்புகளுக்கும் (DENV-1, DENV-2, DENV-3, DENV-4) எதிராக நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

iii. இந்த தடுப்பூசி இரண்டு தவணைகளாக- முதல் டோஸ் செலுத்தப்பட்ட மூன்று மாதங்களுக்குப் பிறகு இரண்டாவது டோஸ் செலுத்தும் வகையில் வழங்கப்படுகிறது. முந்தைய தலைமுறை டெங்கு தடுப்பூசிகளில்

சிலவற்றைப் போல, தடுப்பூசி செலுத்துவதற்கு முன்பு டெங்கு பாதிப்பு இருந்ததா என்பதை உறுதிப்படுத்தும் ரத்தப் பரிசோதனை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இதில் இல்லை.

iv. யாருக்கு செலுத்தலாம்?

- QDENGA தடுப்பூசி 4 முதல் 60 வயது வரையிலானவர்களுக்கு பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தாலும், பாதிக்கப்படாதவர்களாக இருந்தாலும் இந்த தடுப் பூசியை செலுத்திக் கொள்ளலாம். இதனால், டெங்கு தொற்று வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு பயனாளிகளைத் தேர்வு செய்ய வேண்டிய தேவை இல்லை

v. செயல்திறன் எப்படி?

- பல்வேறு நாடுகளில் நடத்தப்பட்ட மருத்துவப் பரிசோதனைகள் மற்றும் நீண்டகால ஆய்வுகளின் அடிப்படையில், QDENGA தடுப்பூசி அறிகுறிகளுடன் கூடிய டெங்கு பாதிப்பை சுமார் 80 சதவீதம் வரை குறைக்கிறது. மேலும், கடுமையான டெங்கு பாதிப்பு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட வேண்டிய நிலையை 84 முதல் 90 சதவீதம் வரை குறைக்கும் திறன் கொண்டதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

- இந்த தடுப்பூசியின் பாதுகாப்புத் திறன் குறைந்தது ஏழு ஆண்டுகள் வரை நீடிப்பதாக நீண்டகால ஆய்வு முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

vi. பக்கவிளைவுகள்

- QDENGA தடுப்பூசி செலுத்தப்பட்ட பிறகு பொதுவாக லேசான அல்லது மிதமான பக்க விளைவுகள் மட்டுமே பதிவாகியுள்ளன. ஊசி செலுத்திய இடத்தில் வலி அல்லது சிவத்தல், தலைவலி, தசை வலி, லேசான காய்ச்சல் போன்றவை சிலருக்கு ஏற்படலாம். இவை பெரும்பாலும் தற்காலிகமானவை என்றும், தானாகவே சரியாகிவிடும் என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

vii. யாருக்கு இந்த தடுப்பூசி பொருந்தாது?

- QDENGA என்பது உயிருடன் பலவீனப்படுத்தப்பட்ட தடுப்பூசி என்பதால், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளவர்கள் இந்த தடுப்பூசியை எடுத்துக்கொள்ளக் கூடாது என மருத்துவ நிபுணர்கள் அறிவுறுத் தியுள்ளனர்.

viii. உலக அளவில் டயன்பாடு

- QDENGA தடுப்பூசிக்கு உலக சுகாதார அமைப்பின் முன்தகுதி (Prequalification) வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஐரோப்பிய ஒன்றியம், பிரிட்டன், பிரேசில், இந்தோனேசியா, தாய்லாந்து, ஆர்ஜென்டீனா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட 40-க்கும் மேற்பட்ட நாடுகளில் இந்த தடுப்பூசி ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ளது.

- இந்தியாவில் தற்போது இந்த தடுப்பூசிக்கு டிசிஜிஐ வழங்கியுள்ள சந்தைப்படுத்தல் அனுமதி, டெங்கு தடுப்பு நடவடிக்கைகளில் புதிய அத்தியாயத்தைத் தொடங்கியுள்ளது. இருப்பினும், தடுப்பூசி பயன்பாட்டுக்கான வழிகாட்டுதல்கள், விலை, அரசு தடுப்பூசி திட்டத்தில் இணைப்பது தொடர்பான முடிவுகள் உள்ளிட்டவை பின்னர் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.